பேரறிஞர் அண்ணா 115வது பிறந்த நாள்

திருச்சி மாநகர தி.மு.க. சார்பில் சிலைக்கு அமைச்சர் கே.என்.நேரு மாலை!

மாவட்டச் செயலாளர் க.வைரமணி முன்னிலை! மு.அன்பழகன் அறிக்கை!

திருச்சி, செப். 14- திருச்சி மாநகரச் செயலாளர் மு.அன்பழகன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மாகாணத்தை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்தவரும், தந்தை பெரியாரின் கொள்கைகளை செயல்படுத்த ஆட்சி அதிகாரம் இருந்தால்தான் செயல்படுத்த முடியும் என்று எண்ணி திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி. கடமை. கண்ணியம். கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை தந்தவருமான பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவை போற்றும் வகையில் நாளை (15.9.2023 - வெள்ளிக்கிழமை) திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு காலை 8.00 மணியளவில் கழக முதன்மை செயலாளர். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் மத்திய மாவட்ட திமுக.செயலாளர் வழக்கறிஞர். க.வைரமணி முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளார்கள்.

எனவே, இந்நிகழ்வில் மாவட்டக் கழக, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டபிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், செயல்வீரர்கள், கழகமூத்த முன்னோடிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மு.அன்பழகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாரதியார் நினைவு தினம்:

விவரம் தெரியாமல் ஆளுநர் தமிழிசை பேசுவதா?

அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அறிக்கை

சென்னை, செப். 14 -

பாரதியார் நினைவு தினத்தையொட்டி தமிழ்நாடு முதல்வர் மீது விவரம் தெரியாமல் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் அறிக்கை வெளியிட்டுள்ளார் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களின் அறிக்கை வருமாறு:-

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மீது தெலங்கானா மாநில ஆளுநர் அருமை சகோதரி தமிழிசை சவுந்திரராஜன் அவர்களுக்கு என்ன கோபம் என்று தெரியவில்லை!? தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் தளபதி அவர்களை வம்புக்கு இழுத்து, "பாரதியாருக்கு மரியாதை செலுத்தத் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நேர மில்லையா" என்று கேட்டிருக் கிறார்.

அத்தோடு நிற்கவில்லை அவர். "அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் கைகுலுக்கத் தெரிந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு" என்று கூறியிருக் கிறார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கைகுலுக்கிய இடம், ஒன்றியத்தில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. வும், அந்த ஆட்சியின் பிரதமராக இருக்கும் நரேந்திர மோடி அவர்களும், ஏன், ஒன்றிய அமைச்சர்களும், "சாதனை" என்று பக்கத்திற்குப் பக்கம் தொலைக்காட்சிக்குத் தொலைக் காட்சி விளம்பரம், பேட்டிகள் வாயிலாகப் பெருமைப்படுத்திக் கொண்ட ஜி20 மாநாட்டு நிகழ்ச்சியில் தான்!

சகோதரி தமிழிசை அவர்களுக்கு ஆளுநர் என்ற முறையில் தன்னை அழைக்காமல் பிரதமரை விட்டு விட்டாரே என கோபமா? அல்லது ஜி20 மாநாட்டிற்கு இப்படியொரு விளம்பரத்தைச் செய்தது வருத்தமா? பாரதியாரையும் வம்புக்கு இழுத்து, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களையும் வசைபாடியிருக்கிறார்.

பாரதியாருக்குப் பெருமை சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர் வழியில் நின்று, பாரதியாரைப் பெருமைப்படுத்தும் பல்வேறு பணிகளைத் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எங்கள் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்து வருகிறார்.

பாரதியின் நினைவுநாள், "மகாகவி நாள்"; பாரதி இளங்கவிஞர் விருது வழங்கப்படும் என்று அறிவிப்பு; வாரணாசியில் அவர் வாழ்ந்த வீடு 18 லட்சம் ரூபாய் செலவில் புனரமைப்பு; அதில் மகாகவி பாரதியாரின் மார்பளவு சிலை வைப்பு; சிறு நூலகம், வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் புகைப்படங் கள்; வரலாற்றுப் படைப்புகள் வைப்பு" என எல்லாவற்றையும் நிறைவேற்றி, மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டைச் சிறப்பாகக் கொண்டாடி, அதற்குச் சிறப்பு நூற்றாண்டு மலர் வெளியிட்டதும் முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை சகோதரி தமிழிசை அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

ஆனால் இவை எதுவுமே தெரியாதது போல், ஒருவேளை அண்டை மாநில ஆளுநராகச் சென்று விட்டதால், தமிழ்நாட்டு அரசியல் விவரங்களுடன் தொடர்பு விட்டுப் போனவர் போல் சகோதரி பேசியிருப்பது வேதனைக்குரியது.

அவர் குறிப்பிட்ட பாரதியாரின் நினைவு நாளன்று, தமிழ்நாடு அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் மரியாதை செலுத்தியிருக்கிறார்கள். அவரது பிறந்தநாளன்று முதலமைச்சர் அவர்களே மரியாதை செலுத்தி, நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார்.

ஆகவே தெலங்கானா மாநில ஆளுநராக இருக்கும் சகோதரி, தமிழ்நாட்டிற்கு வரும்போதெல்லாம் ஏதாவது ஒரு பேட்டி கொடுக்க வேண்டும் என்பதற்காக, தன் அரசியல் நிலைப்பாட்டைத் தமிழ்நாட்டில் தக்க வைத்து, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஆசையை டெல்லி மேலிடத்திற்கு வெளிப்படுத்தும் விதமாக, தவறான பேட்டிகளைக் கொடுத்து, பாரதியாரின் பெருமையை மட்டுமல்ல அனைத்துக் கவிஞர்களின் புகழையும் பரப்பி வரும் திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தெலங்கானாவிலிருந்து தமிழ்நாடு வந்தவுடன், குறைந்தபட்சம் கடந்தகால பத்திரிக்கைச் செய்திகளைப் படித்து விட்டு தி.மு.க. அரசைக் குறைகூறுங்கள். அப்படியும் படிக்க இயலவில்லை என்றால், ஒரு மாநிலத்திற்கு இரு மாநிலம் என்ற நிலையில், ஆளுநர் பொறுப்பை வகிக்கும் சகோதரி தன் அதிகாரிகளிடமாவது, "அவ்வப்போது தமிழ்நாடு அரசியல் நிலவரங்களைச் சொல்லுங்கள்" என்று கேட்டுத் தெரிந்து கொண்டு, தி.மு.க. மீது ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வையுங் கள் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க. மகளிர் அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (நான்காவது பட்டியல்)

தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

கோவை வடக்கு மாவட்டம்

தலைவர் - எஸ்.ராணி, 1/75,மேற்குத் தோட்டம், தெலுங்குபாளையம், அன்னூர், கோவை.

துணை தலைவர் - ரதி ராஜேந்திரன் குறிஞ்சி நகர், பழையபுதூர் ரோடு, எஸ்.ஆர்.கே.வி அஞ்சல், கோவை.

அமைப்பாளர் - **ஜி.ரதி மனோகர்,** பொன்விழா நகர், காரமடை ரோடு, மேட்டுப்பாளையம், கோவை.

துணை அமைப்பாளர்கள் - சரோஜினி, 133/3, காந்திநகர், தெற்குப்பாளையம், கோவை - 20. அமிர்தவல்லி, 182/3, லாரி ரோடு, கோவை. பார்வதி, 9/46, தொண்டாமுத்தூர் மெயின் ரோடு உலியம்பாளையம், தீனம்பாளையம் அஞ்சல், கோவை 641109 லீலாவதி, 7/245, திருமகன் நிலையம், சாமநாயக்கன்பாளையம், வெள்ளம்மடை, கோவை. ரேவதி, போறகவுண்டர் வீதி, துடியலூர், கோவை. வலைதள பொறுப்பாளர்கள் - திவ்யா, 12/24, பெருமாள் கோவில் வீதி, சென்னனூர், கோவை. எஸ்.பிரியா, 2/903, காந்திபுரம், ஆலங்கோம்பு, சிறுமுகை,கோவை.

மயிலாடுதுறை மாவட்டம்

தலைவர் - ஜி.உமாதேவி, அய்யாரப்பர் கீழவீதி, மயிலாடுதுறை.

துணை தலைவர் - மும்தாஜ், பரக்கத் காலனி, நீடூர், நெய்வாசல், மயிலாடுதுறை.

அமைப்பாளர் - **ஆர்.சாந்தி,** நடுத்திட்டு மெயின் ரோடு, வரதம்பட்டு, மயிலாடுதுறை.

துணை அமைப்பாளர்கள் - பா.சிவஞானசுந்தரி, காளியம்மன் கோவில் தெரு, நக்கம்பாடி அஞ்சல், குத்தாலம் தாலுகா, மயிலாடுதுறை. வளர்மதி ராமச்சந்திரன், ஆச்சாள்புரம் அஞ்சல், சீர்காழி தாலுகா, மயிலாடுதுறை. என்.காளியம்மாள், மேலத்தெரு, ஆலங்காடு, என்.பி.சாவடி, ராதாநல்லூர், சீர்காழி, மயிலாடுதுறை. டெய்சி, மெயின் ரோடு, மணல்மேடு, மயிலாடுதுறை. சியாமளா பாஸ்கரன், மேலத்தெரு, அனந்தமங்கலம் காழியப்பநல்லூர் அஞ்சல், மயிலாடுதுறை. மு.வசந்தி முருகேசன், திருவள்ளுர் தெரு, மாதிரவேளூர், சீர்காழி, மயிலாடுதுறை. எம்.தனவள்ளி, தாடலாள் மேலவீதி, சீர்காழி தாலுகா, மயிலாடுதுறை மாவட்டம். சந்தனமதி ஆறுமுகம், தெற்கு தெரு, மீனவர் காலனி, வானகிரி அஞ்சல், தரங்கம்பாடி தாலுகா, மயிலாடுதுறை. வலைதள பொறுப்பாளர்கள் - செ.மகாலட்சுமி, சின்ன கண்ணாரத்தெரு, மயிலாடுதுறை மாவட்டம். பி.விஜய பாரதி, மெயின் ரோடு, அரசூர், எருக்கூர் அஞ்சல், சீர்காழி தாலுகா, மயிலாடுதுறை.

கோவை தெற்கு மாவட்டம்

தலைவர் - இரா.கமலம், 12/35ஏ பட்டேல் வீதி, மதுக்கரை மார்க்கெட், கோயம்புத்தூர் - 641105

துணை தலைவர் - பா. சக்தி சரண்யா 50, குமரன் வீதி, கிணத்துக்கடவு, கோயம்புத்தூர் 642109

அமைப்பாளர் - **ஜெ.ஜெயலலிதா,** 2/281, ஆசிரியர் காலனி, சின்னையம்பாளையம், கோயம்புத்தூர் - 641062.

துணை அமைப்பாளர்கள் - எஸ்.மாலதி, 4/20, எஸ்.ஆர்.எஸ். புரம் ரோடு, கலங்கல் ரோடு, சூலூர், கோவை - 641402. பத்மாவதி, 3/74, பாப்பம்பட்டி அஞ்சல், ஒண்டிப்புதூர் வழி, கோயம்புத்தூர் - 641016. செல்வி விஜயராஜன், வாழை தோட்டம் அஞ்சல், வால்பாறை - 642127, கோயம்புத்தூர். எம்.முத்துலட்சுமி, எல். எஃப்.காலனி, ஆழியார் நகர், ஆனைமலை, கோயம்புத்தூர். எம். உமா மகேஸ்வரி, 1/48, ராசிசெட்டிபாளையம், ஊத்துக்குளி, பொள்ளாச்சி, கோவை. நா.செல்வி, விநாயகர் கோவில் வீதி, அம்பராம்பாளையம், பொள்ளாச்சி - 642103, கோவை. வலைதள பொறுப்பாளர்கள் - விஜய் காயத்ரி, கரிகால சோழன் வீதி, பொள்ளாச்சி, கோவை. எஸ்.கௌசல்யா, 18, மருதமுத்து, செட்டியார் விதி, செட்டிபாளையம், கோவை 641201.

கோவை மாநகர் மாவட்டம்

தலைவர் - வி.தீபா, பிருந்தாவன் கார்டன் அவென்யூ, சுந்தரம் கார்டன், கணபதி அஞ்சல், கோவை - 641006.

துணை தலைவர் - சி.பி.மீனாட்சி, 76,ஹட்கோ காலனி, 3-வது வடக்கு குறுக்கு தெரு, டாடாபாத், கோவை.

அமைப்பாளர் - **வி.அன்னம்மாள்,** ராமண்ணா லே அவுட், பாரதி பார்க் ரோடு - 2, சாய்பாபா காலனி, கோவை - 11.

துணை அமைப்பாளர்கள் - சு.மரகதம், 9/19-ஏ, இந்திரா நகர், 4-வது வீதி, ஒண்டிப்புதூர், சிங்காநல்லூர் பகுதி - 1, கோவை - 43. எஸ்.தேவகி சுப்ரமணியம், 9/11, காமாட்சியம்மன் கோவில், கள்ளிமடை, சிங்காநல்லூர் பகுதி 2, கோவை - 5. பி.கௌசல்யா, 44/297, எரிமேடு, பைபாஸ் ரோடு, சுங்கம், சிங்காநல்லூர் பகுதி 3, கோவை - 45. எஸ்.லோகேஸ்வரி, 14, தூக்கினார் வீதி, பீளமேடு பகுதி 1, கோவை - 4. ஸ்ரீ.பிரியா சசிகுமார், 5/6, நந்தகோபால் வீதி -2, சித்தாப்புதூர், பீளமேடு பகுதி - 2, கோவை. ரா.மணிமேகலை, 17, உடையாம்பாளையம்மெயின் ரோடு, சௌரிபாளையம், பீளமேடு பகுதி 3, கோவை - 28. ஆர்.லதா, 5-வது வீதி, கிராஸ்கட் ரோடு, காந்திபுரம், கோவை 12. கமலவேணி தங்கவேல், 390, பெரியார் நகர், ராமநாதபுரம், கோவை 45. ராஜராஜேஸ்வரி, 99, நன்னெறிக்கழக வீதி எண் 2, ஆர்.எஸ்.புரம், பெரிய கடை வீதி பகுதி 1, கோவை 2. ஜீ.தமிழ்செல்வி, திருமால் வீதி சந்து எண் 6, வி.கே.ரோடு, பெரிய கடை வீதி பகுதி 2, கோவை - 01, ஜி.கலாவதி, 73, 5-வது வீதி, கே.கே.புதூர், சாய்பாபா காலனி பகுதி, கோவை - 38. தா.புவனேஸ்வரி, 1578/146/4, தடாகம் ரோடு, வேலாண்டிபாளையம், கோவை - 35. சத்யா செல்வம், 21, திருவள்ளூர் வீதி, கணபதி பகுதி, இரத்தினபுரி, கோவை 27. எஸ். ஜானகி, 77, சங்கரலிங்கனார் வீதி, மணியகாரன்பாளையம், கோவை - 6. ஆர்.சின்னத்தங்கம், 17, விநாயகர் கோவில் வீதி, வடவள்ளி பகுதி, கல்வீரம்பாளையம், கோவை - 46. எஸ். அங்குலட்சுமி, 22/31,தியாகி குமரன் வீதி, சீரநாயக்கன்பாளையம், கோவை - 7.

கரூர் மாவட்டம்

தலைவர் - பி.சாந்தி, 225, அருணாச்சல நகர், பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம்.

துணை தலைவர் - எஸ்.வளர்மதி, 36ஏ/19, வசந்தம் நகர் 2வது கிராஸ், ராயனூர், தோரணக்கல்பட்டி அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம்.

அமைப்பாளர் - **கே.நந்தினி தேவி,** 3/269, உத்தம கவுண்டனூர், தரகம்பட்டி வழி, பாலவிடுதி அஞ்சல், கடவூர் தாலுகா, கரூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - ஆர்.மல்லிகா ரத்தினம், 253/1பி, சின்னமநாயக்கன்பட்டி, வீரராக்கியம், வீரராக்கியம் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர் மாவட்டம். வி.மனோன்மணி, 71/10, மேற்கு தெரு, டி.செல்லாண்டிப்பாளையம், தோரணக்கால்பட்டி அஞ்சல், கரூர் மாவட்டம். எஸ்.கனகாம்பாள், 63, மேற்கு நஞ்சையா தெரு, கரூர் அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம். ர.ஷோபா, 4/1636, நேதாஜி நகர், அருகம்பாளையம், காதப்பாறை அஞ்சல், மண்மங்கலம் தாலுகா, கரூர் மாவட்டம். ஆர்.சித்ரா, 2/153, விஸ்வநாதபுரி, விஸ்வநாதபுரி அஞ்சல், புகழூர் தாலுகா, கரூர் மாவட்டம். வலைதள பொறுப்பாளர்கள் - எஸ்.அனுரேகா, 107/6, ரெங்கநாதபுரம், மாயனூர் வழி, ரெங்கநாதபுரம் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர் மாவட்டம். எஸ்.தீபா, 5/243,அ. உடையாப்பட்டி, கழுகூர் அஞ்சல், குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம்.

மதுரை மாநகர் மாவட்டம்

தலைவர் - பி.சிவானம்மாள், 83 முத்துராமலிங்கம், பைக்கரா மெயின் வீதி, மதுரை - 625004.

துணை தலைவர் - எம்.காளீஸ்வரி, 883 கற்பக நகர் விரிவாக்கம், செம்பக்குளம் மெயின் ரோடு, கே.புதூர், மதுரை 625007.

அமைப்பாளர் - **அ.சரவண புவனேஸ்வரி,** 2பி, பீ.டீ.ஆர் நகர், ஆத்திகுளம், மதுரை 625007

துணை அமைப்பாளர்கள் - கே.சாந்தி, 10 ஏ, ஜவஹர் ரோடு, காந்திநகர், மதிச்சியம், மதுரை 625020. ஆர்.உஷாராணி, பஜனை மடத்தெரு, அச்சம்பத்து, மதுரை 625019. கே.செம்பா கந்தசாமி, 4/928, வேளாங்கண்ணி நகர், அண்ணா நகர், மதுரை 625020 எம்.ஷோபனா, நாடார் தெரு, மேலமாத்தூர், மதுரை 625034 தி.வெண்மணி, 123, பாரத் நகர், 3வது தெரு, எஸ். கொடிக்குளம், கே.புதூர், மதுரை 625020. சோ.மணிமேகலை, எண்.7, 5 ஆம் பிளாக், பாஸ்கரதாஸ் நகர், தீபீர் நகர், மதுரை 625001. ஆ.பாமாமுருகன், எண் 129, எல்லிஸ் நகர், மதுரை 625016. வலைதள பொறுப்பாளர்கள் - எஸ்.நந்தினி தேவி, பி10/10, மல்லிகா குடியிருப்பு, கே.கே.நகர், மதுரை 625020 ச.சோபியா ராஜாத்தி, 36/42, பாத்திமா நகர் 2வது தெரு, மதுரை 625016.

தஞ்சை மாநகரம்

அமைப்பாளர் - **ரம்யா சரவணன்,** 43,8-ம் தெரு, அண்ணா நகர், விளார் சாலை, தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் - கே.ரேவதி கார்த்திகேயன், 2016, சேர்வைக்காரன் தெரு, கரந்தை, தஞ்சாவூர். எ. ஸ்டெல்லா நேசமணி 33-943, மிஷன் 3வது தெரு, மானம்புச்சாவடி, தஞ்சாவூர். சுகாசினி முரளி 50, டவுன் கரம்பை, கீழத் தெரு, கீழவாசல், தஞ்சாவூர். ச. கரோலின் பாத்திமா 1-35, அண்ணா காலனி தஞ்சாவூர். எம். ரத்னாதேவி 6-90, சேவப்பநாயக்கன் வாரி, நடுகுளம், தஞ்சாவூர்.

சென்னை தெற்கு மாவட்டம்

தலைவர் - சமீனா செல்வம், 2/933, பெரியார் நகர், 6வது தெரு, மடிப்பாக்கம், சென்னை 600091.

துணை தலைவர் - த.வளர்மதி, 3/611எ, கோவிந்தன் நகர், முதல் குறுக்குத் தெரு, பாலவாக்கம், சென்னை 600041.

அமைப்பாளர் - **எஸ்.கனிமொழி தனசேகரன்,** 110-12வது செக்டர், 77வது தெரு, கே.கே.நகர், சென்னை 600078.

துணை அமைப்பாளர்கள் - விசாலாட்சி கபிலன், 32/99, கிழக்குக் கடற்கரைச் சாலை, திருவான்மியூர், சென்னை 600041. வி.செல்வி, 10,ஜெ பிளாக், கொத்தவால் சாவடி தெரு, குடிசை மாற்று வாரிய குடியிருப்பு, சைதாப்பேட்டை, சென்னை 600015. புவனேஸ்வரி, 4, ஏ-பிளாக், கோட்டூர்புரம், சென்னை 600085. பூங்குழலி, 18/4, பள்ளிக்கூடத் தெரு, விருகம்பாக்கம், சென்னை 600092 ஜி.லட்சுமி, 10-9வது சரஸ்வதி தெரு, டாக்டர் காணுநகர், நெசப்பாக்கம், சென்னை 600078. ஏ.சுந்தரி ஆதிகேசவன், 11/231, பாரதிதாசன் சாலை, முகப்பேர் கிழக்கு, சென்னை 600031. வி. திலகவதி, 17/2, கலைஞர் தெரு, வளசரவாக்கம், சென்னை 600087. லதா சங்கர், 13/38, புதுத்தெரு, தாமோதரபுரம், அடையாறு, சென்னை 600020. பா.லட்சுமி, 11, 2வது குறுக்குத் தெரு, 3வது மெயின் ரோடு, வெங்கடேஸ்வரா நகர், வேளச்சேரி, சென்னை - 600042 சரசுவதி அண்ணாமலை, 16, கட்டபொம்மன் தெரு, திருவள்ளூர் நகர், பெருங்குடி, சென்னை 600096 ஜெ. கலைச்செல்வி, 3/648, எம்.ஜி.ஆர் நகர், பாலவாக்கம், சென்னை - 115. எம்.மஞ்சுளா, 64, வைத்திலிங்கம் தெரு, சோழிங்கநல்லூர், சென்னை - 19. ஏ.பிரபாவதி, 8, திருவள்ளூர் தெரு, ஐயப்ப நகர், சென்னை 600077. டி.சுகன்யா தனசேகரன், 12/151, வீர பத்திரன் நகர், வேங்கைவாசல், சென்னை 600100. கே.ஸ்டெல்லா மேரி, 5- 22, கோதாமேடு, பழைய வீடு வசதி வாரியம், சைதாப்பேட்டை, சென்னை 600015. மேகலா ஜெயவேல், 2, மருத்துவமனை தெரு, எஸ்.பி.கார்டன், தியாகராய நகர், சென்னை 600015.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட கமலா செல்வம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **தவசுமணி** (காட்டு நாவல், கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை மாவட்டம்.) அவர்கள் **புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.** ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள்: 12-09-2023

ஜெ. ஹெலன்டேவிட்சன்,
செயலாளர்,
தி.மு.க. மகளிர் அணி

தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (நான்காவது பட்டியல்)

தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

கோவை வடக்கு மாவட்டம்

தலைவர் - வனஜா, 4, திருவள்ளூர் நகர், குனியமுத்தூர், கோவை.

துணை தலைவர் - எம்.கௌசல்யா, ராசி கார்டன், பூச்சியூர், தீனம்பாளையம், கோவை.

அமைப்பாளர் - **டி.வி.ரங்கநாயகி,** 4/755, குப்புசாமி நாயுடு லே அவுட், தொப்பம்பட்டி, கோவை.

துணை அமைப்பாளர்கள் - தேன்மொழி பாபு, 9/323, திம்மம்பாளையம், தெற்கு தோட்டம், காரமடை, கோவை. சித்ரா மகேஷ், 3/1, மருமரா காம்ப்ளக்ஸ், செந்தில் நகர், சிவானந்தபுரம், சரவணம்பட்டி, கோவை. லதா, 29/2, சி.எஸ்.சி நகர் பிரஸ் காலனி, கோவை. ஆர்.விஜயலட்சுமி, 800, பேரூர் மெயின் ரோடு, செல்வபுரம், கோவை. ஜெனிபர், 10/34டி. ஜீவா நகர், சிறுமுகை, கோவை. வலைதள பொறுப்பாளர்கள் - ஜோஸ்பின் ஆல்வின் ரூபி, 4/19, அண்ணா நகர், விசுவாசபுரம், சரவணம்பட்டி, கோவை. சங்கீத பிரியா, 74/4, எஸ்எம்ஆர் லே-அவுட், சுப்பிரமணியம்பாளையம், ஜி.என்.மில்ஸ், கோவை.

கோவை மாநகர் மாவட்டம்

தலைவர் - பா.சாந்தாமணி, 19/27, தண்ணீர் தோட்டம் வீதி, ஒண்டிப்புதூர், கோவை - 16.

துணை தலைவர் - டி.வசந்தி தியாகராஜன், 54/58, கமலா மில் காலனி, உப்பிலிபாளையம், கோவை - 15.

அமைப்பாளர் - **சி.ஆர்.கனிமொழி,** 139, வெங்கடசாமி ரோடு, நியூ சித்தாபுதூர், கோவை - 641044.

துணை அமைப்பாளர்கள் - என்.வேலுமணி, 39/1, எஸ்.எம். எஸ்லே-அவுட், வடக்கு வீதி 3, சிங்காநல்லூர் பகுதி - 1, ஒண்டிப்புதூர், கோவை - 16. எஸ்.அமுதவேணி, 109, பிள்ளையார் கோவில் வீதி, சிங்காநல்லூர் பகுதி -2, கோவை - 5, வாசுகி, 246 ஏ, பெருமாள் கோவில் வீதி, நஞ்சுண்டாபுரம், சிங்காநல்லூர் பகுதி - 3, கோவை 36. எஸ்.தனலட்சுமி, 19, பாலன் நகர் டி, பீலமேடு பகுதி - 1 பீளமேடு அஞ்சல், கோவை - 4, நா.மணிமொழி, 52/106, ஸ்ரீராமபுரம், பி. என்.பாளையம், பீளமேடு பகுதி - 2, கோவை - 37. ஜோ.மேரி மனோன்மணி, 133 ஏ, மாதா கோவில் வீதி, சௌவரிபாளையம், பீளமேடு பகுதி 3, கோவை - 28. எம். மஞ்சு பிரியா, 154, கோகுலே வீதி, ராம் நகர், காந்திபுரம் பகுதி, கோவை 9. எஸ்.விஜயலட்சுமி, 561, பஜனை கோவில் வீதி, இராமநாதபுரம், கோவை 71774 ஆர். சந்திர கலா, 38/1, காமராஜபுரம் வீதி எண் 5, ஆர்.எஸ்.புரம், பெரிய கடை வீதி பகுதி 1, கோவை - 2. ரா.ராதா, 14/33, காலப்பன் வீதி, ராஜ வீதி, பெரிய கடைவீதி பகுதி 2, கோவை - 1. என்.சிவாத்தாள், 27, நடேச கவுண்டர் லேஅவுட் 2வது வீதி, கணபதி பகுதி, கோவை 27. எம்.பொம்மி, 167, சண்முகா நகர், சங்கனூர் மெயின் ரோடு, இரத்தினபுரி, சாய்பாபா காலனி, கோவை 27. த.ஜோதிலட்சுமி, 12பி/2, முதல் தெரு, ஸ்ரீதேவி நகர், கணபதி, மணியகாரன்பாளையம் பகுதி, கோவை - 6. ஆர்.முத்துலட்சுமி, 53/38, முருகன் நகர், பெரியார் வீதி, வடவள்ளி பகுதி, கோவை. ஈ.சாந்தி, 10 எ, கொண்டசாமி நாயுடு வீதி, வேலாண்டிபாளையம், கோவை - 25. கே.பார்வதி, 269, நேதாஜி வீதி, சீரநாயக்கன்பாளையம், பாப்பநாயக்கன்புதூர் பகுதி, கோவை - 7.

கோவை தெற்கு மாவட்டம்

தலைவர் - மங்கையர்கரசி, ராசி தோட்டம், கோவில்பாளையம், கிணத்துக்கிடவு - 642110, கோவை.

துணை தலைவர் - எஸ்.சண்முகபிரியா, 4 பி, செங்குட்டுவன் வீதி, ஜோதி நகர் டி காலனி, பொள்ளாச்சி - 642001. கோவை.

அமைப்பாளர் - **பி.கவிதா,** 2/93, மெயின் ரோடு, கரியாஞ்செட்டிபாளையம், சமத்தூர், ஆனைமலை, கோவை..

துணை அமைப்பாளர்கள் - நா.சரஸ்வதி, 1/13, பூராண்டாம்பாளையம், சுல்தான்பேட்டை (வழி), சூலூர், கோவை 641669. சரஸ்வதி, 1/236, தச்சன் தோட்டம், சின்னம்மா நாயக்கன்பாளையம், ஜே.கிருஷ்ணாபுரம், கோவை - 641671. பி.மணிமேகலை, 8/49-A, காந்திநகர், பட்டணம் ரோடு, வெள்ளலூர், கோவை - 641111 எஸ்.பர்க்கத், 1/14, வடக்கு மாகாளியம்மன் கோவில் வீதி, ஆனைமலை, கோவை- 642104. எஸ்.ஜெயப்பிரியா, 12, எம்.ஆர்.கே நகர், ஹைவேஸ் ரோடு, செட்டிபாளையம், மதுக்கரை, கோவை - 641201. எஸ்.சுகுணா, 7/49, நேதாஜிபுரம், வேலந்தாவளம் ரோடு, கா.கா.சாவடி, கோவை. வலைதள பொறுப்பாளர்கள் - எ.சாப்ரா, செந்தில் ரெசிடென்சி, சூலூர், கோவை 641402. எம்.பூங்கொடி, 10/300, சிதம்பரனார் நகர், வால்பாறை, கோவை 642127

கரூர் மாவட்டம்

தலைவர் - கே.உதயராணி, 44,காந்தி சாலை வடக்கு, கரூர் அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் 639001.

துணை தலைவர் - வி.சாந்தி, 29, புதிய காளிபாளையம், புலியூர் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர் மாவட்டம் 639114

அமைப்பாளர் - **எம்.பிரின்சி,** 342, திருக்காம்புலியூர், எல்.என். எஸ் அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் 639002.

துணை அமைப்பாளர்கள் - ஆர்.பொன்னுத்தாய், 23 வெள்ளைக்கவுண்டன் நகர், தாந்தோணி மலை அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் 639004 பி.சுப்புலட்சுமி, பகவதியம்மன் கோவில் தெரு, பழைய ஜெயங்கொண்ம் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர் மாவட்டம். எம். ராஜேஸ்வரி, 262/8, காசா காலனி, மாயனூர் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர் மாவட்டம் 639113 எம்.ஜெ.சமீம் பாத்திமா, 45/173 பி, பெரிய ஓடைத் தெரு, பள்ளப்பட்டி அஞ்சல், அரவக்குறிச்சி தாலுகா, கரூர் மாவட்டம் 639207. டி.சாந்தி, 110, டி.என்.எச்.பி காலனி, காந்திகிராமம் தெற்கு, பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் 639004. வலைதள பொறுப்பாளர்கள் - கே.உத்திரமணி, 7,இந்திரா நகர், எல். என்.எஸ்.அஞ்சல், கரூர் தாலுகா, கரூர் மாவட்டம் 639002. ஆர். ஜோதி, 10/30, கீழ கொடிக்கால் தெரு, குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம்.

தஞ்சை மாநகரம்

அமைப்பாளர் - **ஆர்.தமிழரசி,** 106ம் தெரு, அண்ணா நகர், தஞ்சாவூர்

துணை அமைப்பாளர்கள் - ஏ.கெஜ லட்சுமி அசோகன், 23, வாடிவாசல் வைக்கோல் காரத்தெரு, மாணம்பச்சாவடி, தஞ்சாவூர். செ.வனிதா, 42, கீழ வண்டிக்காரத் தெரு, தஞ்சாவூர். பா.வாசுகி, 20, காத்தூண் நகர், நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சாவூர். பி. இந்திரா பழனி, 2 டவுன் கரம்பை கிழக்குத் தெரு, கீழவாசல், தஞ்சாவூர். வினோதினி கரிகாலன், எண் 32, 3-ம் தெரு, மாதவராவ் நகர், நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர்.

மதுரை வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - கோசலா தேவி, இந்திரா நகர், கச்சை கட்டி அஞ்சல், வாடிப்பட்டி, மதுரை. ஆர்.கீதா ரமணி, 155/17, கருத்தப்புலியன் பட்டி, திருவாதவூர் ரோடு, மேலூர், மதுரை.

மதுரை மாநகர் மாவட்டம்

தலைவர் - எ.ராமலட்சுமி, காளை அம்பலக்காரர் தெரு, கோச்சடை, மதுரை 625016.

துணை தலைவர் - மா ஆண்டிச்சி, மதிச்சியம், வைகை வடகரை, ராமராயர் மண்டபம், மதுரை 625020.

அமைப்பாளர் - **இ.நூர்ஜகான்,** 24 தெற்கு மாவட்ட வீதி, மதுரை 625001.

துணை அமைப்பாளர்கள் - ம.போதுமணி, தெற்கு தெரு, புதுக்குளம், வடிவேல்கரை, மதுரை 62019. ஆ.பஞ்சவர்ணம், தாசில்தார் குறுக்கு தெரு, சாத்தமங்கலம், மதுரை 625020. ஜா.ஜெயசீலி, 58 முருகன் கோயில் தெரு, ஜவஹர் புரம், மதுரை 625007. எஸ்.ராஜேஸ்வரி, வித்வான் பொன்னுசாமி, பிள்ளைத்தெரு, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை 625001. ஏ. முத்துக்குமாரி, சம்பாகுளம் 1-வது தெரு, மூன்றுமாவடி, கே புதூர், மதுரை 625007. பி.விசாலாட்சி, பாஸ்கரதாஸ் நகர், 1-வது சந்து, மதுரை 625001. என்.உஷாராணி, 36/16, தாசில்தார் முதல் குறுக்கு தெரு, சாத்தமங்கலம், மதுரை 625020. வலைதள பொறுப்பாளர்கள் - என்.கலாதேவி, 67 அம்பேத்கர் காலனி, 1-வது தெரு, முல்லை நகர் மீனாம்பாள் புரம், மதுரை 625002. கே. அனுப்பிரியா, 3/217, மந்தையம்மன் கோவில் தெரு, சிக்கந்தர் சாவடி, மதுரை - 625018,

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள்: 12-09-2023

நாமக்கல் ப.இராணி
செயலாளர்,
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி